# வேதாத்திரி மகரிஷி கூறும் "கருமையம்" – ஓர் ஆய்வு

**வ. பழனி**
*கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (ஓய்வு)*
*நிறைஞர் பட்டம் (YHE) (இரண்டாம் ஆண்டு)*
*பாரதியார் பல்கலைக்கழகம், கோவை*

***முனைவர் P. சுந்தரமூர்த்தி***
*பேராசிரியர்*
*WCSC விஷன் அகாடமி, ஆழியாறு*

**ஆய்வுச் சுருக்கம்**

கருமையம் (Genetic Centre) என்பது "ஆன்மா'' என்கிறது வேதாத்திரியம். நாம் செய்கின்ற நல்வினை, தீவினைகளை பதிவுசெய்துள்ள ஓர் ஊடகமே (Medium) கருமையம். பருவுடலில் காந்த ஆற்றல் சுழன்று கொண்டியிருக்கிறது. எந்தப் பொருள் சுழன்றாலும் அச்சுழற்சியிலிருந்து அதுவே அழுத்தம் பெற்று மையத்தில் திணிவு அதிகமாகிவிடும். மேற்பகுதியில் அழுத்தம் குறைவாக இருக்கும். இந்தச் சிறப்பை "துல்லிய சமதளச் சீர்மை (Specific Gravity)'' என்று சொல்வார்கள். இந்த தத்துவ நியதிப்படி காந்த அலைச் சுழற்சியின் விரைவால் மையத்தில் திணிவு நிலை ஏற்படுகிறது. அந்த காந்தத் திணிவுநிலை தான் கருமையம். எண்ணத்தை பண்படுத்தி எண்ணத்திற்கு உயர்வூட்டி நம் கருமையத்தை தூய்மையாக வைக்கவேண்டும். "அவரவர் வாழ்க்கையின் சிற்பி அவரவர் எண்ணங்களே'' நல்லதை செய்வோம் அல்லதை விடுவோம்.

**முக்கிய வார்த்தைகள்:** உயிர்த்துகள்கள், சீவகாந்தம், வான்காந்தம், கருமையம், ஆன்மா, கர்மம்.

**முன்னுரை**

நாம் இவ்வுடலைப் பெற்றிருப்பதன் நோக்கமே அழகாக, நலமாக இருக்கவும், மற்றவர்கள் உயர்வாகப் போற்றக்கூடிய பண்பு நெறிகளோடு வாழவும், நம்மைச் சுற்றிலும் ஒரு தெய்வீக உலகை உருவாக்கவும் தான். அதற்கு யோகக் கலை பெரிதும் உதவுகிறது. யோகம் என்பது உடலுக்கும், உயிருக்கும், மனதிற்கும் இனிமைகாத்தல். ஒவ்வொருவரின் மனதின் தரமே அவரவரின் தகுதியாகிறது. மனதில் இருந்துதான் எண்ணம், சொல், செயல், உருவாகிறது. எண்ணத்தின் உயர்வை ஒட்டியே மனதின் தரமும், உயர்வும் அமைகின்றன. தீய எண்ணங்களை நம் மனத்தால் எண்ணினோம்; செயலினால் இறங்குகிறோம் என்று மறந்தும் மனதில் இடம் கொடுத்து விடக்கூடாது. எண்ணி விட்டு விட்டாலும் கூட அவ்வெண்ணத்தின் ஆற்றல் ஒத்ததரமுடைய இன்னொருவரின் உள்ளத்தில் புகுந்து செயலுக்கு வந்துவிடும். அத்தகைய ஆற்றல் பெற்றது எண்ணம். எண்ணம் ஈடேறி அதன் விளைவுகள் கருமையத்தில் பதிவாகின்றன. அப்படி பதிவான நல்வினைகள், தீயவினைகளை நாம் அனுபவித்தே ஆகவேண்டும். செயலின் விளைவு உடனடியாக வரலாம் ஒரு நாளில் வரலாம்; ஒரு வாரம் கழித்து வரலாம் ஒரு மாதம் கழித்து வரலாம் ஓராண்டு கழித்து வரலாம்; பத்து ஆண்டுகள் கழித்து வரலாம் அடுத்த தலைமுறைக்கும் வரலாம். செய்த செயலுக்கான விளைவு நிச்சயம் வரும். இதுதான் இயற்கையின் சட்டம் (Law of Nature) இது தான் இறைநீதி. நாம் விளைவை அனுபவித்து தான் தீரவேண்டும். அதை இன்பமாகவோ, துன்பமாகவோ, அமைதியாகவோ, பேரின்பமாகவோ

அனுபோகித்து அனுபவமாகப் பெற வேண்டும். இத்தகைய தனிச் சிறப்பு வாய்ந்த வரலாற்றுப் பெட்டகமாகிய கருமையத்தைப் பற்றியும், சீவகாந்த அலைகள், மனம், எண்ணங்கள் பற்றி இந்த ஆய்வறிக்கையில் அறியலாம். சாதாரண மக்கள் வெறும் நடத்தையைத் தான் பார்க்கிறார்கள். ஆனால் யோகம் பயிலுபவர்கள் நடத்தைக்கு அப்பாலும் பார்க்கவேண்டும்.

**வேதாத்திரியின் இறைநிலைத் தன்மாற்றத் தத்துவம்**

இறைநிலை என்ற சுத்த வெளியானது தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தம் ஆற்றலால் வெடித்து இறைத்துகள்களாகி (Dust Particle) அவைகள் சூழ்ந்தழுத்தம் ஆற்றலால் தற்சூழற்சி பெற்று காந்தமாகிறது. இந்த இறைத் துகள்களின் திரட்சியே ‘‘விண்’’ (Fundamental Energy Particle) என்ற பெயர் பெறுகிறது. விண்கள் ஒவ்வொன்றும் தனக்குத்தானே சுழன்று கொத்தியியக்கமாகி காற்று, நெருப்பு, நீர், நிலம் என்ற மூலகங்களாகி, அவை மேலும் தன்மாற்றம் அடைந்து ஓரறிவு முதல் ஆறறிவு கொண்ட மனிதனாக தன்மாற்றம் அடைந்துள்ளது. வானிலிருந்து கிடைக்கின்ற காந்தம் “வான்காந்தம்“ என்றும், சீவன்களிலிருந்து கிடைக்கின்ற காந்தம் “சீவகாந்தம்“ என்றும் மூலகங்கள் உயிரற்ற பொருட்கள் என்றும் ஓரறிவு முதல் ஆறறிவு மனிதன் வரை உயிரினங்கள் என்றும், இறைநிலை, இறைத்துகள் மெய்ஞானம் என்றும் மற்றவை விஞ்ஞானம் என்றும் வேதாத்திரி மகரிஷி அவர்கள் விஞ்ஞான விளக்கம் தருகிறார்.

**உயிரத்துகள்கள்**

உயிர் கண்களுக்குத் தெரியாது. அதை உணரத்தான் முடியும். உயிர் மிக நுண்ணியது. உயிரினங்களில் தனித்து இயங்கும் விண்ணுக்கு உயிர்த்துகள்கள் (Life Energy Particle) என்று பெயர். உயிரற்ற பொருட்களில் விண் என்று அழைக்கப்படுகிறது.

**விண்**

இறைத்துகள்கள் ஒன்று சேர்ந்து தொகுப்பாக இருக்கும் போது ‘‘விண்’’ என்று பெயர். விண் என்ற உயிர்த்துகள்கள் வினாடிக்கு பல இலட்சம் சுழல்கள் வேகத்தில் சுழன்று கொண்டிருக்கிறது. அதன் சுழற்சிவேகம் குறையும்போது ‘‘எலக்ட்ரான்’’ (Electron) ‘‘புரோட்டான்’’ (Proton) ‘‘நியூட்ரான்’’ (Neutron) முடிவாக முழு வேகம் குறைந்து கரைந்து சுத்த வெளியாக மாறும் போது ‘‘கருத்துகளை’’ (Black Hole) என்று அழைக்கப்படுகிறது.

**சீவகாந்தம்**

உடலுக்குள் கோடிக்கணக்கான உயிர்த்துகள்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு உயிர்த்துகளிலும் எண்ணற்ற இறைத்துகள்கள் உள்ளன. ஒவ்வொரு உயிர்த்துகளும் தன்னைத்தானே சுற்றிக் கொண்டிருக்கிறது. அந்த தற்சுழற்சியினால் அதில் இருக்கும் இறைத்துகள்களே காந்த அலைகளாக (Spreading Wave) வெளியே வருகின்றன. அவ்வாறு வெளிவருகின்ற அலைகளின் தொகுப்பே “சீவகாந்தம்“ (Bio Magnetics) எனப்படுகிறது. சீவகாந்தமே உடல் மன இயக்கங்களுக்கு அடிப்படையான ஆற்றலாகும்.

**மனித உடலில் சீவகாந்தம் இயக்கம்**

மனித உடலில் சீவகாந்தமானது இரண்டு வகையான கட்டுப்பாட்டு மையங்களோடு இயங்குகிறது.

1. தானியங்கி நரம்பு மண்டலம் (அடிமனம்) (Autonomous Nervous System) அது உடல் அளவிலே சம்பந்தப்பட்டது.
2. மைய நரம்பு மண்டலம் (புறமனம்) (Central Nervous System) இது மனதளவில் அமைந்தது.

சீவகாந்தம் நான்கு வழிகளில் உடலுக்கு கிடைக்கிறது. 1. உணவு, நீர் 2. காற்று, 3. வான் கோளிலிருந்து வரும் வான் காந்த அலை, 4. பூமியிலிருந்து வரும் கதிரியக்கம். உடலில் உள்ள செல்களின் அடுக்குகள் சரியாக இருக்கும் அளவிற்கேற்ப சீவகாந்த ஆற்றல் இருப்பாக அமையும். சீவகாந்த ஆற்றல் வறட்சியும், முரண்பாடும் ஏற்பட்டால் துன்பம் உண்டாகும். சீவகாந்த செலவு அளவோடு இருக்குமானால் இன்பம் உண்டாகும். சீவகாந்த உற்பத்தி, செலவு, இருப்பு எல்லாம் சரியாக இருந்தால் அமைதி உண்டாகும். இந்த அமைதியான சூழ்நிலையில் ஒருவன் தன்னைப் பற்றி ஆராய்ந்து ‘நான் யார்’ என்று உணர்ந்து இறைநிலையே அறிவாக நானாக உள்ளேன் என்று உணர்ந்தால் அது பேரின்பமாகும்.

**சீவகாந்த இயக்கமும், பூமியும்**

நாம் பூமியின் மீது வாழ்கின்றோம். பூமி ஒரு மணிக்கு சுமார் 1042 மைல் (1668 கி.மீ) வேகத்தில் தன்னைத் தானே சுற்றிக்கொண்டியிருக்கிறது. பூமி சுற்றும் வேகத்தால் எந்த கெட்டிப் பொருளையும் மையத்தை நோக்கி இழுக்கும் நியதி அதற்கு அமைகிறது. பூமியின் மீது வாழ்கின்ற மனிதனின் பருஉடலில் உள்ள சிற்றறைகள் (Cells) எல்லாம் பூமியின் நடுமையம் நோக்கி தள்ளப்படுகிறது. கட்டிடம் கட்டுவதற்கு செங்கற்களை இறுக்கிப் பிடித்துக்கொள்ள சிமெண்ட் தேவைப்படுவது போல் உடலில் உள்ள செல்களை சீவகாந்தம் இறுக்கி பிடித்துக் கொண்டிருக்கிறது. பூமியின் சுழல் வேகத்தால் இலேசான உயிர்த்துகள்கள் நமது உடலில் இருந்து வெளியேறிக் கொண்டிருக்கின்றன. மேலும் மன இயக்கத்திற்கும் உடல் இயக்கத்திற்கும் சீவகாந்தம் செலவாகிறது. அதனால் உயிர்த்துகள்களின் எண்ணிக்கை குறைகிறது. எனவே நரம்புகள் பாதிக்கப்பட்டு தளர்வடைகின்றன. உடல் தளர்ந்து போகிறது. இந்த தளர்வைத்தான் ‘‘முதுமை’’ என்கிறோம்.

**மனம்**

சீவகாந்தமே மனமாக இயங்குகிறது. உயிரின் படர்க்கை நிலையே (Extended Activities of the Life Force) மனம் என்கிறது வேதாத்திரியம், மனத்திலிருந்து தான் எண்ணம், சொல், செயல் என்ற முத்தொழிலும் பிறக்கின்றன. மனமானது இரண்டு செயல்களைச் செய்கிறது. நமது அனுபோக அனுபவங்களைச் சுருக்கி வைத்துப் பின்னர் எண்ணங்களாக விரிக்கிறது. எண்ணங்களாக விரிக்கிறது. இன்பம், துன்பம், அமைதி, பேரின்பம் என்ற விளைவை பெறுகிறோம். மனமானது உணர்ச்சி, தேவை, முயற்சி, செயல், விளைவு, அனுபோகம், ஆராய்ச்சி, தெளிவு, முடிவு என்கிற பத்து நிலைகளில் இயங்குகிறது.

**எண்ணம்**

ஆன்மா உடல்மூலம் ஒரு துன்ப உணர்ச்சியைப் பெறும்போது அதிலிருந்து தன்னை மீட்டுக்கொள்ள ஒரு பொருளையோ, ஒரு செயலையோ, ஒரு இயக்கத்தையோ நாடுகின்றது. எந்தப் பொருளானாலும், செயலானாலும், இயக்கமானாலும் அதற்கு காலம், தூரம், பருமன், வேகம் என்ற நான்கு பரிமாணங்கள் உண்டு.

இந்த பரிமாண அளவுகளைக் கொண்டு ஒவ்வொரு பொருளையும், செயலையும் இயக்கத்தையும் ஆன்மா கணிப்பதால் அச்செயலுக்கு எண்ணம் என்ற பெயர் ஏற்பட்டது. எண்ணுதலாகிய எண்ணத்திலிருந்து எண்ணமாகியது. எண்ணங்கள் அளப்பெரிய ஆற்றலைக் கொண்டவை. ஓர் எண்ணம் தனக்கோ, பிறருக்கோ, தற்காலத்திலோ, பிற்காலத்திலோ அறிவுக்கோ, மனதிற்கோ, உடல் உணர்ச்சிக்கோ துன்பம் விளைவிக்காமல் இருக்க வேண்டும். துன்பம் தராத எண்ணங்கள் நல்ல எண்ணங்கள் துன்பம் தருபவை தீய எண்ணங்கள்.

**மனித தத்துவம்**

நமது உடல் மூன்று தத்துவங்களை ஒன்றிணைத்து அமைக்கப்பட்டு இயங்குகின்றன. 1. பருஉடல் (Physical Body), 2. நுண்ணுடல் (Astral Body), 3. காந்த அலை உடல் (Magnetic Body), இவை ஒன்றுக்குள் ஒன்றாக இணைந்து இயங்குகின்றன. பருவுடல் செல்களால் ஆனது. நுண்ணுடல் விண்கள் என்ற உயிர்த்துகள்களால் ஆனது. காந்த அலைவுடல் விண்களின் கரைசலான இறைத்துகள்களின் சூழற்சியால் உண்டான காந்த அலைகளால் ஆனது. இறைத்துகள் ஒரு பாய்ம பொருள். ஒவ்வொரு செல்லிலும் நுழைந்து உடல்முழுவதும் காந்தஓட்டமாக சுழன்று ஓடிக்கொண்டியிருக்கின்றன.

**கருமையம் என்றால் என்ன?**

பருவுடலில் காந்த ஆற்றல் சுழன்று கொண்டியிருக்கிறது. எந்தப்பொருள் சுழன்றாலும் அச்சுழற்சியிலிருந்து அதுவே அழுத்தம் பெற்று மையத்தில் திணிவு அதிகமாகிவிடும். மேற்பகுதியில் அழுத்தம் குறைவாக இருக்கும். இந்தச் சிறப்பை துல்லிய சமதளசீர்மை (Specific Gravity) என்று சொல்வார்கள். இந்த தத்துவ நியதிப்படி காந்த அலைச் சுழற்சியின் விரைவால் மையத்தில் திணிவு நிலை ஏற்படுகிறது. அந்த காந்தத்திணிவுநிலைதான் கருமையம். இக்கருமையம் உயிரினங்களின் மூலாதாரத்தில் அமைந்திருக்கிறது. உடலின் தலையிலிருந்து கால்வரை உள்ள உடலமைப்பில்

மையப்புள்ளி இருக்கும் இடமே கருமையம் என வழங்கப்படுகிறது. இறைநிலையே காந்த ஆற்றலாகி அதன் திணிவு நிலையே மையமாக இருப்பதால் அதன் சிறப்பான பெயர் கருமையம் எனப்படுகிறது. ‘‘கரு என்றால் இறைநிலை’’ என்று பெயர்.

கருமையம் முதன் முதலில் சிற்றுயிர்களில் அமைந்து அதே உயிரினம் பரிணாம சிறப்பால் உடல் அளவில் பல சீவஇனங்களாக மாறிவந்து முடிவில் மனிதன் வரையில் இடம்கொண்டு இயங்கி வருகிறது. நாம் உண்ணும் உணவு இரசம், இரத்தம், தசை, கொழுப்பு, எலும்பு, மஜ்ஜை, விந்துநாதம் என ஏழு தாதுக்களாக மாறுகிறது. ஏழாவது தாதுவான விந்து நாதத்திலிருந்து தான் உயிர்த்துகள்களும் உற்பத்தியாகின்றன. கருமையம் சீவகாந்தமையம், உயிர்மையம், வித்துமையம் என்ற மூன்றும் இணைந்து ஒன்றை மற்றொன்று காத்தும் ஒன்றுக்கு மற்றது உதவியும் இயங்கும் ஓர் இயற்கை நியதியே கருமையம் ஆகும்.

**கருமையப் பதிவு என்றால் என்ன?**

கருமையம் என்பது காந்த அலைத் திணிவு, கருமையம் இரண்டு வேலைகளைச் செய்கிறது. இறுக்க ஆற்றல் கருமையத்தில் சுருக்கிப்பதிவு செய்கிறது. விலகும் ஆற்றல் கருமையத்திலிருந்து விரிந்து எண்ணங்களாக மலர்த்திக் காட்டுகிறது. மனிதன் எந்தச் செயல் செய்தாலும் உடலில் ஓடிக்கொண்டிருக்கும் சீவகாந்தத்தில் ஏற்படும் தாக்கங்கள் அனைத்தும் கருமையத்தை போய்ச் சேருகின்றன. இந்நிகழ்ச்சியை ‘‘வினைப்பதிவு’’ என்று கூறுகிறோம். நமது அனுபோக, அனுபவங்களை உடலில் சுற்றிக்கொண்டேயிருக்கும் காந்தஆற்றல் உடனடியாக மூளைக்கு அனுப்பிவிடும். மூளையில் போன உடனேயே மூளையின் அலை இன்னும் சுருக்கி கருமையத்திற்கு அனுப்பி விடுகிறது. கருமையமும் மூளையும் ஒரே வேலையைத் தான் செய்கின்றன. கருமையத்தில் சுருங்கி, திணிவு பெற்ற காந்தத்தில் (Magnetic Domain) அழுத்தி இருப்பாக ஆகிவிடுகிறது. கரு மையத்திற்கு உவமை கூறுவது என்றால் கணினியை (Computer) சொல்ல முடியும். கணிணியில் உள்ள சீப் (Chip) போன்றதே சீவனில் உள்ள கருமையம். கணினியில் அலை இயக்கமாக சுருங்கியும், விரிந்தும் ஆயிரக்கணக்கான நிகழ்ச்சிகள் அடங்கியிருக்க அவற்றைப் பயன்படுத்துகிறோம். அதுபோலவே கருமையமும் செயல்படுகிறது.

**கருமையத்திற்கும் கர்மாவிற்கும் உள்ள தொடர்பு**

மனிதனின் செயலும், அதன் விளைவுகளும் கருமையத்தில் பதிவுகளாக தோன்றுகிறது. நமது முன்னோர்களின் சீவகாந்தத்தில் உள்ள பதிவுகள் கருத்தொடராக நமது பிறப்பிலேயே பதிவுகளாக வந்து விடுகின்றன. கருவின் மூலம் வருகின்ற இப்பதிவுகளை நாம் ‘‘கருவமைப்பு பதிவுகள்’’ அல்லது ‘‘சஞ்சீத கர்மம்’’ என்கிறோம். பிறப்பிற்கு பிறகு நாம் செய்கின்ற செயல்களினால் கருமையம் அடைகின்ற பதிவுகளை ‘மேலடுக்குப் பதிவுகள்’ அல்லது ‘பிராரப்த கர்மம்’ என்கிறோம். இவ்விரண்டு பதிவுகளும் இணைந்து ஆன்மா இச்சைப்பட்டு புதிய விளைவுகளைச் செய்வதும் ‘‘அகாமிய கர்மம்’’ ஆகும். இந்த மூன்று கர்ம விளைவுகளும் கருமையத்தில் பதிவாகிறது.

**செயல் விளைவுத் தத்துவம்**

கருமையத்தில் உள்ள தரத்திற்கு ஏற்ப எண்ண வெளிபாடுகள், எண்ணுவதற்கேற்ப செயல்கள், செயல்களுக்கு ஏற்ப விளைவுகள் என்பது இறைநீதி, நல்ல செயல் செய்தால் நன்மைகள், நல்ல பதிவு. தீய செயல் செயதால் தீமைகள், தீயபதிவு. செயலின் விளைவு உடனடியாக வரலாம். பத்தாண்டுகள் கழித்தும் வரலாம். அடுத்த தலைமுறைக்கும் வரலாம். ஆனால் நிச்சயம் வரும். இதுதான் இறைநீதி எனும் செயல்விளைவுத்தத்துவம்.

**உளவியல் கண்ணோக்கில் கருமையம்**

கருமையத்தைப் பற்றி உளவியலாக ஆராய்ந்தால், ஆதியில் சிற்றுயிராக இருந்து, தன்மாற்றம் அடைந்து எத்தனை பிறவிகள் எடுத்து, பலவிதமான உடலியிக்க, மனயியக்க அனுபவங்களை பெற்றிருக்குமோ, அவையெல்லாம் ஒன்றுவிடாமல் கூடியிருக்கும் நமது இரகசியங்கள் அனைத்தும் அடங்கும்

அடங்கிய ஒரு தெய்வீக நீதிமன்றம் என்று சொல்லாம். மேலும் ஓர் உடல் உயிரோடு இயங்கிக் கொண்டியிருக்கும் போது ஒரு குழந்தை (Progeny) பிறந்தால் இந்த கருமையம் தன்னகத்திலேயுள்ள தன்மைகளை அக்குழந்தைக்கு அடிப்படையான மூலதனமாக கொண்டு அமைந்துவிடும். அந்த குழந்தை வளரும் அவ்வப்போது நிலவும் சூழ்நிலைக்கேற்ப செயல் புரியும். வாழ்க்கை காலத்தில் செய்யும் செயல் அனுபவங்களும் கருமையத்தில் கூடி அதனோடு இணைந்துக் கொள்ளும். இது இறை ஆற்றலின் அற்புத அறிவினால் அமையும். கருமைய ஆற்றலின் பிறவித் தொடராகும். கருமையத்தின் மறுபெயரே ‘‘ஆன்மா’’ என்கிறது வேதாத்திரியம். ஆன்மா என்பது பதிவுகள் அடங்கிய காந்தஅலைத்தொகுப்பு. ஆகவே ஒருவரது உடலில் இயங்கும் ஆன்மா, உலகில் உள்ள அனைவரின் ஆன்மாக்களோடும் தொடர்பு கொண்டுள்ளது. உடல் அழிந்தாலும் ஆன்மாகிய அலைத்தொகுப்பு வான்காந்தமண்டலத்தின் மூலம் வாழுகின்ற சீவன்களின் ஆன்மாவோடு கலந்து அந்த சீவன்கள் மூலமாக செயலாக்கம் பெறுகிறது.

**முடிவுரை**

இதுவரையில் நமது ஆய்வில் எண்ணங்கள் கருமையத்தில் பதிவாகிறது என்றும், எண்ணத்தின் உயர்வை ஒட்டியே தனிமனிதனின் தரமும், உயர்வும், ஆளுமையம் உருவாகின்றன. எனவே எண்ணத்தைப் பண்படுத்த வேண்டும். எண்ணத்தைப் பண்படுத்தி எண்ணத்திற்கு உயர்வூட்டி நம் கருமையத்தைத் தூய்மையாக வைக்கவேண்டும். ‘‘அவரவர் வாழ்க்கையின் சிற்பி அவரவர் எண்ணங்களே’’ நல்லதை செய்வோம் அல்லதை விடுவோம். தீய எண்ணங்களின் விளைவால் ஏற்படுகின்ற விளைவுகளே அதன் கூலி ஆகும். அதனை விதி என்று கூறித் தப்பிக்க இயலாது. ஏனெனில் அது நமது வினைப்பயன்.

வாழ்க வளமுடன் வாழ்க வேதாத்திரியம்

**பார்வையிட்ட நூல்கள்**

1. வேதாத்திரி மகரிஷி, ‘இறைநிலை ஆய்வு’ வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு - 638001.
2. வேதாத்திரி மகரிஷி, ‘மறைபொருள் விளக்கம்’ வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு - 638001.
3. வேதாத்திரி மகரிஷி, ‘மனம்’ வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு - 638001.
4. வேதாத்திரி மகரிஷி, ‘கடவுளும் கருமையமும்’ வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு - 638001.
5. வேதாத்திரி மகரிஷி, ‘செயல்களின் விளைவாக வெளிப்படும் இறைநீதி’ வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு - 638001.
6. வேதாத்திரி மகரிஷி, ‘ஞானமும் வாழ்வும்’ வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு - 638001.